ஸர்வங்ஞுன்னு த்ரிமூர்த்திகளுக்குள்ள ஸர்வங்ஞுன்னு பரமேஶ்வரனுக்குத் தான் சொல்லிருக்கா. ஆகையினால ஸர்வங்ஞனான ஒரு புள்ள, ஒரு புள்ளயா இருந்தா போரும்னு சொன்னேனா ஸர்வங்ஞன் என்னத் தவிர வேற ஸர்வங்ஞன் கெடயாது. ஆகையினால நானே தான் ஒங்களுக்கு கொழந்தையா பொறக்க போறேன்னு ஒரு வார்த்த சொல்லிட்டு போயிட்டார் ஸ்வாமி ஸொப்பனத்துல. ஆகையினால ஶங்கரனே அந்த மாதிரி அநுக்ரஹம் பண்ணினத்துனால அந்த கொழந்தைக்கு ஶங்கரன்னு பேர் வெச்சா அப்படின்னு ஒரு அர்த்தம் இருக்கலாம்.

ஆனா அந்த ஸ்ம்பிரதாயம், ஶங்கரனே அவதாரம் பண்ணேன்ங்கறத்துக்கு ஒரு அடையாளம், அந்த பொறந்த நாளுடைய பேர வெச்சுன்னா வெக்கிற வழக்கம்னு சொன்னேன். அந்த தேஶத்துல, அந்த பழைய காலத்துல, இப்ப ராஜாக்கள் மாத்ரம் பாக்கி இருக்கு அது. அது நக்ஷத்ரமாயிருக்கு. ஆனா இந்த திதி வந்து சொன்னேன் வைஶாக ஶுக்ல பஞ்சமினு சொன்னேன். இந்த ஸம்ஸ்க்ருத பாஷைல, எல்லா ஶாஸ்த்ரமுமே ஶ்லோகமா தான் இருக்கு. வைத்யம் ஶ்லோகமா இருக்கு, Dictionary லயே ஶ்லோகம் இருக்கு. எல்லாம் அப்பப்ப நெட்ரு பண்ணிக்கறத்துக்கு. Dictionary ய எங்கயாவது ஶ்லோகமா பூரா பண்றதுன்னு யோஜனையா இருக்கும். தமிழ் Dictionary யும் பாட்டு தான், ஸம்ஸ்க்ருத Dictionary யும் பாட்டு தான் எல்லாம்.

அதுக்கு நிகண்டு னு பேரு தமிழ்ல இருக்கறத்துக்கு, ஸுந்தர நிகண்டு, ஸம்ஸ்க்ருதத்லயும், நிகண்டுங்ற பேரு ஸம்ஸ்க்ருதம் தான். நிகண்டுனு பேரு இருந்தா கூட அமரத்துக்கெல்லாம் நிகண்டுனு பேரு. அந்த நிகண்டு எல்லாம் தமிழ்லயும் ஸம்ஸ்க்ருதத்லயும் எல்லாம் பாட்டு தான், ஶ்லோகம் தான். எல்லாம் ஶ்லோகமா இருக்கறத பார்த்திருக்கலாம். Dictionary கூட ஶ்லோகமா இருக்கட்டும். கணக்கு புஸ்தகம் எப்படி ஶ்லோகமா இருக்கறது? கணக்கு போடறது, பதில் சொல்றது, அதெல்லா எப்படினா, கணக்கு புஸ்தகமும் முழுக்க முழுக்க ஶ்லோகம் . கணக்கு புஸ்தகம் ஶ்லோகம் னா, number எப்படி ஶ்லோகத்துல சேர்த்துக்கறது. எழுத்து வேணா , பதம் வேணா ஶ்லோகத்துல சேர்க்கலாம், number எப்படி ஶ்லோகத்துல சேர்க்கறது. அப்படினு அவாளுக்கு சந்தேகம் வந்தது. அதுக்காக அந்த

ஜோஸியங்கள்லாம் கணக்கில்லாம போனா ஜோஸியம் வராது. ஆனா ஜ்யோதிஷ □ாஸ்த்ரத்ல கணித □ாஸ்த்ரம் கூட ஒரு அங்கம். கணித ஸ்கந்தம்னு த்ரிஸ்கந்தம்னு பேரு ஜ்யோதிஷத்துல, அதுல astronomy ஒண்ணு, astrology ஒண்ணு, mathematics ஒண்ணு இது மூணும் சேர்ந்து தான் ஜ்யோதிஷ □ாஸ்த்ரம்னு பேரு. ஹோரா ஸ்கந்தம், கணித ஸ்கந்தம், இந்த மாதிரி இந்த கணிதத்துல எல்லாம் □்லோகமா வந்துட்டா அப்புறம் இந்த எண்ணிக்கைய எப்படி சேர்க்கறது ஸ்லோகத்துல அப்படினு ஒரு சந்தேகம் வந்தது. அதுக்காக இந்த ஜ்யோதிஷம் என்னன்னா கணக்கு கூட ஜோஸியம் பார்க்கறவா எல்லாரும், கணித □ாஸ்த்ரம் படிச்சு, ஜோஸியம் சொல்றவா எல்லாரும் அந்த பஞ்சாங்கம் கணிக்கறவா எல்லாரும், அதுக்கு ஆதாரம் ஆன புஸ்தகங்கள்ல ஒரு ஸங்கேதம் வைச்சிண்டுருக்கா அவா, அதுக்கு “கடபயாதி ஸங்க்யை”னு பேரு ஜ்யோதிஷ □ாஸ்த்ரத்துல.
க, ட, ப, ய ஆதி ஸங்க்யைனு அதுக்கு ஒரு, ஒரு பேர் வெச்சுண்டுருக்கா. அந்த “கடபயாதி” னா ஒண்ணும் புரியலையே. “க” முதல் ஒம்போது எழுத்துக்கு 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 அப்படினு கணக்கு வெச்சுக்கணும். க முதல் ஒன்பது எழுத்து இருந்துதானால், எந்த எழுத்து வரதோ, அது " Kha " னா னா 2 னு அர்த்தம். “gha”னா 4 னு அர்த்தம். (क, ख, ग, घ)Ka, kha, ga, gha.
(ङ) " ங " னா 5 னு அர்த்தம், ச, ச$_2$, ஜ, ஜ$_4$, ஞ , (च, छ, ज, झ, ञ) - ச, ச$_2$, ஜ, ஜ$_4$ (च, छ, ज, झ) வரைக்கும், க முதற்கொண்டு ஒன்பது எழுத்து வந்துதானா, இந்த எழுத்து இருக்கிற எடத்துலெல்லாம் 1, 2, 3, 4 னு அர்த்தம். “காதி நவ” Ka முதல் ஒம்போது எழுத்துக்கு 1,2,3,4 னு அர்த்தம். “பாதி பஞ்ச” pa, pha, ba, bha, ma (प, फ, ब, भ, म). இது 1, 2, 3, 4, 5 னு அர்த்தம். “யாத்யஷ்டௌ” ய, ர, ல, வ, □, ஷ, ஸ அது வரைக்கும் " ய " முதல் இந்த எட்டெழுத்துக்குள்ள எது வந்தாலும், அதுக்கு 1, 2, 3, 4, 5, 6, 7, 8 னு அர்த்தம், அப்படினு எந்த இடத்துல எந்த எழுத்து வரலாமோ, சில இடங்கள்ல அர்த்தங்கள், வேற சில அர்த்தங்கள் கூட சொல்லிக்கும் படியான பதங்களா சேர்த்து வெச்சு, இந்த ஸங்கூதத்துல மேளகர்த்தா எப்படியோ , அந்த கணக்க வெச்சு தான், இந்த ஒவ்வொரு ராகத்துக்கும் 72 மேளகர்த்தானு பேர். அந்த மேளகர்த்தாகளுக்கு பேரெல்லாம், இந்த 1, 2, 3, 4, 72 னு வறத்துக்கு, இந்த

எழுத்துக்கள வெச்சு, இன்னொரு அர்த்தமும் கொடுக்கும் படியா பண்ணி அப்படித் தான் அந்த கணக்கு வெச்சிருக்கார்னு சொல்ற வழக்கம். இந்த வெங்கடமகி னு ஒரு ஸம்பிரதாயம் வெங்கடமகியினுடைய ஒரு ஸம்பிரதாயத்துல, அந்த கடபயாதி ஸங்கியா ப்ரகாரம் தான் மேளகர்த்தா ராகங்களுக்கு பேர் வெச்சுருக்கா. அந்த மாதிரி கணக்குல, ஆச்சார்யாள் பொறந்தது எத்தனாவது மாஸம்? சாந்த்ரமானபடி சைத்ரம், வை◌ாகம், ரெண்டாவது மாஸம். அப்புறம் பக்ஷம் ◌ுக்ல க்ருஷ்ணே, முதல் பக்ஷம். திதி - அஞ்சாவது திதி. அப்ப 2, 1, 5 அப்படினு அர்த்தமாச்சு. 2, 1, 5 னு சொன்னா, இந்த கணக்குல,

" காதி ந, காதி நவ; டாதி நவ; பாதி பஞ்ச; யாத்யஷ்ட"ம்ங்ற கடபயாதி ஸங்கியைல, "அங்கானாம் வாமதோ கதி:" எண்ணிக்கைய குடுக்கற எழுத்துக்கெல்லாம் , ஸாமான்ய எழுத்துக்களக் காட்டிலும் கொஞ்சம் ஒரு மாறுதல் இருக்கணும், அப்ப தான் அடையாளம் தெரியும். அதுக்காக தலை கூழலயே கணக்கு பண்ணிக்கணும். தலை கூழ கணக்கு பண்ணிக்கறத இன்னொரு எடத்துல சொல்லிருக்கா. பகவத் கூதைல ஒரு எடத்துல சொல்லிருக்கா. ஆச்சார்யாள் சொல்லிருக்கா அத . அந்த ஆஸனம் எப்படி போட்டுக்கறது. ஜபம் பண்றப்ப ஆஸனம் எப்படி போட்டுக்கறதுங்கறத கூதைல ஒரு ◌்லோகம் இருக்கு. "சேலாஜிந-கு◌ோத்தரம்" அப்படினு பகவத் கூதைல இருக்கு. "சேலாஜிந-கு◌ோ, இதுக்கு ஆச்சார்யாள் பாஷ்யம் பண்ணிருக்கா, கூதா பாஷ்யம், கூதா, பகவத் கூதைக்கு பாஷ்யம் பண்ணிருக்கா. சேலாஜிந-கு◌த்தரம் னா, "சேலம்" னா துணி, "அஜினம்" னா தோல். மான் தோலோ அல்லது புலித் தோலோ. "கு◌ம்" னா தர்ப்பப் பில்லு , சேலம், அஜினம், கு◌ம், இது மூணையும் போட்டுண்டு, அது மேல ஒக்காண்டு ஜபம் பண்ணனும். அப்ப முதல்ல கூதை கணக்கப் பார்த்தா, துணிய போட்டுக்கணும் முதல்ல, அதுக்கு மேல தோல போட்டுக்கறது, அதுக்கு மேல தர்ப்பைய போட்டுக்கறது. அப்படி இருந்தாலும் அத தலை கூழ மாத்தணும்னு ஆச்சார்யாள், தலை கூழ. பகவான் சொன்னத தலை கூழ மாத்தணும் னு சொன்னார் ஆச்சார்யாள் . கடசூல தர்ப்பைய போட்டுண்டா, உட்கார்ந்த இடம்லா எங்கியானும் அது வந்து கொஞ்சம் அஜாக்ரதையா அன்னண்ட, இன்னண்ட அசைஞ்சுதானா, கால் கை சுத்திண்டானா எந்தூர்ல இருக்கோமோ

அந்தூர்ல ஒக்காண்டுருவோம். என்ன காரியத்துல எங்க போய், என்ன காரியம் பண்ணியாகணும், அப்படினு, அதனால மொள்ள போயிண்டுருக்கணும், இதுக்கெல்லா பணத்தினுடைய ஒரு அவசியமே இல்லாம, மனுஷ்யாளுடைய ஸஹாயம் இருந்துட்டுதானா, மனுஷ்யாளுக்கு சம்பளம் கொடுக்கறத்துக்குத் தானே பணம் வேணும் ஜாஸ்தியா. அவ்வளவு தான். அப்படி, "அங்கம்" னா எண்ணிக்கை. எண்ணிக்கைய சொல்லும் படியான எழுத்துக்கள் வறப்போ, அத தலை கீழ வெச்சுக்க வேண்டியது. உதாரணம் ஒரு கவி சொல்லிருக்கார். ஆச்சார்யாள் எத்தன வருஷம் இருந்தார் னு, ஆச்சார்யாள்க்கு ஒரு புண்ணிய □்லோகம் னு, ஒவ்வொருத்தருக்கும், ஆச்சார்யாள் பரம்பரை புண்ணிய ஸ்லோகத்துல

மஹே□ாம்□ாத் ஜாத: மது$_3$ரம் உபதி$_3$ஷ்டாத்$_3$வய நய:

மஹா-மோஹ-த்$_4$வாந்த ப்ரசமந ரவி: ஷண்மதகுரு: |

ப$_2$லே ஸ்வஸ்மிந் ஸ்வாயுஷி □ரசராப்தே (அ)பிசகலே:

விலில்யே ரக்தாக்ஷிணி--அதிவ்ருஷ ஸித-ஏகாதசி-பரே ||

அப்படினு ஒரு புண்ணிய □்லோகம் . ஒரு கவி அவருடைய அபிப்ராயத்த, ஆச்சார்யாள் இந்த வருஷத்துல பொறந்தார். ஆச்சார்யாள் இந்த வருஷத்துல வந்து அவாளுடைய ஒரு ஆராதனை இந்த வருஷத்துல ஏற்பட்டிருக்கு. அப்படினு சொல்றப்போ, ஆச்சார்யாளுடைய வயசு எவ்வளவு னு சொன்னார். "

மஹே□ா ம்□ாத்ஜாத : மதுரம் உபதிஷ்ட அத்வய நய:"

அத்வைதம் வேதத்துல இருக்கு, உபநிஷத்துல இருக்கு, ஶாஸ்த்ரத்ல இருக்கு. நெறைய இருந்தாலும் பரம மதுரமாக பாஷ்யத்துலேர்ந்து அநுக்ரஹம் பண்ணினது ஆச்சார்யாள். "**மதுரம் உபதிஷ்டாத்வய நய:**" அத்வைத அநுபவம் வந்ததுக்கப்பறம் பரம மதுரமா இருக்கும், பரமானந்தமா இருக்கும் எல்லாருக்கும். அத்வைத ஶாஸ்த்ரம் வாஸிக்கறப்பவே அந்த மதுரம் இருக்கு " பாஷ்யம் ப்ரஸன்ன கம்பீரம்"னு ஆச்சார்யாள்….

" மதுரம் உபதிஷ்டாத்வய நய:
மஹா-மோஹ-த்வாந்த ப்ரசமந ரவி:"

எல்லாருக்கும் மோஹம் புடிச்சிருக்கே,பாஷ்யம் நன்னா வாஸிச்சுண்டுருந்தோமானா அந்த சமயத்திலியாவது அநுபவம் வராட்டா போகட்டும் . அந்த சமயத்திலியாவது எல்லா மோஹங்களும் எல்லா இருட்டும் அப்படியே இந்த ஸூர்யன கண்டது போல "**மஹா-மோஹ-த்வாந்த ப்ரசமந ரவி:**" ஸூர்யனப் போல அப்படி அப்படியே இந்த இருட்டு, கிருட்டு சந்தேகங்கள்லாம் தானா விலகிப் போய்டறது அத படிச்சுண்டுருக்கற மட்டும். அதுனால தான் லோகத்துல ஆச்சார்யாள் பாஷ்யம்னா ஒத்தரும் ரஸிச்சா விட மாட்டேங்கறா லோகம் முழுக்க. நம்ப பரம்பரையா வந்து ஶிஷ்யாளா இருக்கறவா ஸம்ப்ரதாயத்துல வாஸிக்கறது ஒண்ணு இருக்கட்டும். எந்த தேஶாந்திரங்கள்ளையும் எதாவது தத்வம் தெரியணுமானா ஆச்சார்யாள் பாஷ்யம் வாஸிக்க ஆரம்பிச்சா தேஶாந்திரங்கள்ள இருக்கறவா கூட ….. கூட …… உண்டானத்துனால அவாள வாஸிக்கறத்துக்கு ஆரம்பிச்சா.

மஹா-மோஹ-த்வாந்த ப்ரசமந ரவி: ஷண்மதகுரு: |
பலே ஸ்வஸ்மிந் "ஸ்வாயுஷ்யம்ச

விலில்யே ரக்தாக்ஷிணி-

ஆச்சார்யாள் அங்கேர்ந்து கடசில அவாளுடைய புண்ய தினம் எதுன்னு, இத நான் சொல்ல வந்தது அவதார தினத்துக்காக சொல்ல வந்தேன். இப்ப அவாளுடைய புண்ய தினம் எதுங்கறத சொல்றப்போ " **ஸ்வஸ்மிந் பலே** " எங்க அவா லயத்த அடஞ்சா? ஆத்ம ஸ்வரூபமான தன்னுடைய ஸ்வரூபமான பலம். தானே தான் பலம். பலம்,

பலம்னா எல்லாத்துக்கும் நம்ம ஜென்மத்துக்கு என்ன பலம், ஜன்ம ஸாபல்யம்ங்கறோம். பலம் என்ன. தன்னைத் தான் அறிஞ்சு கொள்வது தான் பலம். தான் நிறைந்தவன், ஆனந்த ஸ்வருபிங்கற, அப்ப பலம்ங்கறது இன்னொண்ணு கெடையாது தனியா. தானே தான் பலம். "**பலே ஸ்வஸ்மிந்**" அந்த நெலைய அடஞ்சுட்டாள் ஆச்சார்யாள் . "**ஸ்வாயுஷ்யம்ச**" தன்னுடைய ஆயுஸுலயும் பலத்துல லயத்த அடஞ்சா. தன்னுடைய ஆயுஸு ல பலன்னா என்ன அர்த்தம். "ப " ன்னா என்ன? "காதி நவ; டாதி நவ; பாதி பஞ்ச"ன்னு . பாதி பஞ்சன்னா "ப" மொதக்கொண்டு 5 எழுத்து, 5, ஆ.. ஒவ்வொண்ணுக்கும் மொதல் எழுத்து 1 , ரெண்டாவது எழுத்து 2, "ப", "ப" ன்னா 2 ன்னு அர்த்தம். "யாத்யஷ்டௌ " னு சில, "ய " 'ர" "ல" ங்கறது மூணாவது எழுத்து ஆறது அப்போ "ப" "ல" ன்னா "ப" ங்கறது 2, "ல" ன்னா 3 ன்னு அர்த்தம் அதுக்கு. அப்படி 23 ன்னு அர்த்தம் அதுக்கு.

"**அங்காநாம் வாமதோ கதி**:" எண்ணிக்கை இருக்கற எழுத்தெல்லாம் தலகீழ எழுதியிருக்குன்னு "சேலாஜிந-கு□ோத்தரம்" மாறி , அப்ப 32 வயசுன்னு அர்த்தம் அதுக்கு. "**பலே ஸ்வஸ்மிந்**" அது ஸ்லேடையாயும் இருக்கும். அந்த வயசு, வருஷ கணக்கையும் சொல்லணும். ஸ்லேடையாயும் வாஸ்தவத்துல தன்னுடைய ஆத்ம ஸ்வரூபமே.. பலம், ஜன்ம ஸாபல்ய, ஸ்வ ஸ்வரூபமே பலம், தன்னத் தவிர வேற இன்னொண்ணு இருக்குன்னு நெனைச்சுண்டு இருக்கற வரைக்கும் பலமாகாது. அது இன்னொரு கொறை தான் இதுக்கும் அதுல. தன்னுடைய ஸ்வ ஸ்வரூபமே ஸர்வம் ஆயிட்டுதானா ஸாக்ஷாத் ஈ□்வர, ப்ரபஞ்சம், ஸகலம் , ஆத்ம ஸ்வரூபம், ஸர்வாத்மாக்கள் எல்லாம் தன்னுடைய ஸ்வ ஸ்வரூபம்ங்கற ஒரு அநுபவம் ஒத்தனுக்கு வந்துட்டு தானா அதான் பலம்னு அர்த்தம். பலம்னா 32ன்னு அர்த்தம். அதான் "**அங்காநாம் வாமதோ கதி**:" ங்கறத்த 23அ முப்பத்து ரெண்டாமே, அதே மாதிரி இது அவாளுடைய ஒரு புண்ய தினத்த பத்தின □்லோகம் இது. அவாளுடைய அவதாரத்த பத்தின □்லோகம் என்னவா இருக்கு அப்படிங்கற கணக்கு பாத்தோமானா அவாளுடைய அவதாரத்த ,□்லோகம் இல்ல அது .

கேரளா தே□த்துல உபதிய,காலக் கணக்க வெச்சுண்டு பேர வெக்கறதுனு ஒரு த்ருஷ்டாந்தம் நாலு ராஜாவுக்கு சொன்னேன் அப்போ. இங்க ஆச்சார்யாளுக்கும் அதே மாதிரி காலக் கணக்க வெச்சுண்டு தான் □ங்கர ன்னு பேர் ஏற்பட்டிருக்கு. □ங்கர அவதாரமாக ஆச்சார்யாள் அவதாரம் பண்ணிருக்கறதுனால அந்த □ங்கரனே தம் பேர் வரும்படியான ஒரு ஸமயத்துல பொறந்தா, தானா தம் பேரையே வெச்சுடுவான்னு ஈ□்வர ஸங்கல்பம் பண்ணிண்டு தான் பொறக்கறத்தையும் இந்த மாதிரி ஸமயமா பார்த்து அவதாரம் பண்ணினாள் பரமே□்வரன்.

அதென்ன வை□ாகம்னா என்ன? 2-ஆம் மாஸம்,
□ுக்ல பக்ஷம்னா என்ன?, 1-ஆம் பக்ஷம், 2,1
அப்பறம் □ுக்ல பக்ஷம், அப்புறம் அஞ்சாவது திதி , 2,1,5..
தலகீழ திருப்பணுமோல்யோ, 5 1 2,..
□ம்னா என்ன? “யாத்யஷ்ட” ய, ர ல வ □ 5.
அப்புறம் “க” ன்னா என்ன? “கடபயாதி”.
“க” மொதல் 1, மொதல் பக்ஷம் 5, 1.,
“ர” ன்னா என்ன , “ய”, “ர” 2..

5, 1, 2. “□ங்கர”ன்னு ஆ□்ரம அவதாரம் பண்ணி, அந்த காலத்துல அவதாரம் பண்ணி, அந்த மாதிரி பேர் இவாளுக்கு வெக்கும்படியாக, இவாளுக்குத் தோணும்படியாக லோகத்துக்கு இதுவும் அநுஸரிச்சு, அதுவும் அநுஸரிச்சு, அவதார கால, “□ங்கரா” ங்கற பேரே காலத்த குறிக்கறது. ஆச்சார்யாளே அவதார ஜயந்திய குறிக்கறது. “□ங்கர ஜயந்தி”ன்னா ஜயந்தியே □ங்கரம்னு அர்த்தம் அதுக்கு “ ஜயந்தியே வை□ாக □ுக்ல பஞ்சமி” அப்படின்னு சொல்றச்ச சொல்றதுன்னு.

அதான் நா வேடிக்கையா சொல்ற வழக்கம். ஆனா புதுஸா யாரானும், இத முக்கால்வாஸி பேர் கேட்டுருப்பா. அங்க எங்கயானும் அநேகம் பேர், நான் தான் அம்பது வருஷமா உபன்யாஸம் பண்ணிண்டுருக்கேனே, அதுனால நெறைய பேர் கேட்டுருப்பா. திருப்பி திருப்பி சொன்னதையே சொல்லிண்டிருக்காளே அப்படின்னு நெனைச்சுண்டுருப்பா, அதுனால சில பேராவது கேக்காம இருப்பாங்கறத்துக்காக சொல்றேன்னு மொதல்ல ஆரம்பிச்சேன் அத. அதுனால “பலே” ன்னு சொன்னா அவாளுடைய ஸித்தி காலத்த, அவதார காலத்த □ங்கரான்னு ஆவிர்பவிச்சுண்டு வந்துருக்கா . அது பலம் , இது □ங்கர. அதுனால ஆருக்கு □ங்கர. ஈ□்வரனானத்துனால □ங்கர, வை□ாக □ுக்ல பஞ்சமில பொறந்தத்துனால □ங்கர. அவர நெனைச்ச மாத்திரத்துனால நமக்கெல்லாம் மனஸு க்கு ஒரு □ாந்தி உண்டாயிடறது. அதுனால □ங்கரா. எப்பப்போ நெனைக்கிறோமோ, நெனைக்கறப்பெல்லாம் ஒரு □ாந்தி உண்டாறது. நெனைக்கிறப்பெல்லாம் □ாந்தி உண்டாக்கற ஒரு பரம புருஷன் ஒத்தர் இருக்கணுமானா அவா நேர இருக்கறப்பவும் சரி, ரெண்டாயிரம் வருஷம் கழிச்சும் சரி, அவாள எந்த க்ஷணம் நெனைக்கிறோமோ அப்பெல்லாம் மன ஸு க்கு ஒரு □ாந்தி உண்டாச்சுங்கறதுக்காக. அதக் காட்டிலும் பெரிய பாக்யம் என்ன? எவ்வளவு பணம் இருந்தாலும் □ாந்தி இல்ல, எவ்வளவு பதவி இருந்தாலும் □ாந்தி இல்ல. எதோ ஒரு குறையாதான் இருக்கு, கஷ்டமா இருக்கு. பதவி ஏற ஏற கஷ்டமா இருக்கு. ஆகையினால □ாந்தி இல்லாத ஒரு உலகத்துக்கு மனஸுக்கு நெனைச்ச உடன, ஒரு ஏதாவது ஒண்ணு □ாந்தி கொடுக்கற ஸாமான்

ஒண்ணு இருக்குன்னா, ஆச்சார்யாள நெனச்சா அந்த ஸமயத்துல எல்லாம் மறந்து போறது. அது ஒரு க்ஷணம் இருந்தா போரும். அது நெனைக்கிற ஸந்தர்ப்பம் வரணுமே. அது எப்பவாவது தான் தானா கெடைக்கிறது, கெடைக்க வேண்டிருக்கு நமக்கு. என்னமோ ஜயந்தி உத்ஸவம் கொண்டாடறோம், எல்லாரும் வந்து ஒக்காண்டுடறோம், வேதம், மரபு எல்லாம் மறந்து போய்ட்டோம். இப்ப இது வரது. அதுல ஶாந்தி உண்டாறது . இதே இத்தனை பேர் ஒரு ஸினிமா கொட்டாய்ல உக்காண்டிருந்தா அத்தன பேருக்கும் காமம் உண்டாயிடும். இன்னும் ஒரு கொள்கை உபன்யாசம் போய் கேட்டா கோபம் உண்டாயிடும். கோபத்த கொடுக்கற ஒரு உபன்யாஸம். இது வந்து காமத்த கொடுக்கக் கூடிய ஒரு மேடை. எதோ தெய்வீகமா, இந்த வருஷம், இன்னிக்கு வந்து ஒக்காண்டுருக்கோம் இத்தனை பேரும். அது மனஸுக்கு எல்லாம் மறந்து போய் ஒரு ஶாந்தி கொடுக்கறது. ஆகையினால " ஶம் கரோதி இதி ஶங்கர:" எல்லாருக்கும் ஶாந்தி கெடைக்காதவாளுக்கெல்லாம் ஒரு க்ஷணமாவது ஶாந்தி கொடுக்கும்படியான "ஶம் கரோதி இதி ஶங்கர:"

"விதிதா ந மயா விசதைககலா"

ஒரு ஶாஸ்த்ரம் கூட தெளிவா நான் தெரிஞ்சுக்கல. எவ்வளவு அர்த்தம் தெரிஞ்சுருந்தாலும் தெளிவா ஒத்தனுக்கும் ஒரு ஶாஸ்த்ரம் கூட நான் தெரிஞ்சுணுட்டேன்னு சொல்ல முடியாது. நானோ ஸந்யாஸி, கைல பணமோ கெடையாது, அது தீர்மானம்.

"ந ச கிஞ்சந காஞ்சநமஸ்தி குரோ "

உன்னுடைய க்ருபை தான் வேணும்.

"த்ருதமேவ விதேஹி க்ருபாம் ஸஹஜாம்
பவ ஶங்கர தேசிக மே சரணம்"

விதிதா ந மயா விசதைககலா
ந ச கிஞ்சந காஞ்சநமஸ்தி குரோ
த்ருதமேவ விதேஹி க்ருபாம் ஸஹஜாம்
பவ ஶங்கர தேசிக மே சரணம்